

# பழுதாகி நின்ற கிட்னி; ஓட வைத்த தண்ணீர்!

## 'பலே' தமிழக டாக்டர்!

"'உலகில் 95 சதவீத நோய்களுக்கு, நேரடி–மறைமுக காரணம், தண்ணீர்தான்' என்கிறது, சர்வதேச ஆரோக்கிய நிறுவனம். ஆனால் இதே தண்ணீரை ஸ்படிக துல்லிய தரத்தில், தூய்மையாக அருந்திவந்தால், உடம்பின் 100 சத நோய்களையும் ஓட வைக்க முடியும்"–'அகஸ்தியா' தண்ணீர் சாதனத்தின் பின்னணியில் இருந்தபடி, உற்சாகமாக பேசுகிறார், டாக்டர் சிவகுமாரன் திருமலை (வயது 43).

இவருக்கு பூர்வீகம்–தமிழ்நாடு காஞ்சிபுரம் மாவட்டம், மாமண்டூர். ஆனாலும் பிறந்தது, வளர்ந்தது, படித்தது எல்லாமே மலேசியாவில்தான்!

சிவகுமாரன் மலேசிய ராணுவத்தில் என்ஜினீயரிங் துறையில் பணிபுரிந்தவர். அக்குபஞ்சர், ஹோமியோபதி உள்பட மாற்று மருத்துவங்களும் தெரியும்.



சிவகுமாரனின் மனைவி தவமணி, 2 பெண் குழந்தைகள். இந்தியாவில் முதன்முதலில் தூயதண்ணீருக்காக பிரத்யேக எந்திரம் ('அகஸ்தியா நியூட்ரல் பி.எச். வாட்டர்') ஒன்றை கண்டுபிடித்து சாதனை புரிந்திருக்கிறார்.

திண்ணிய தெளிவும், தெள்ளிய தமிழுமாக டாக்டர் சிவகுமாரன் திருமலையுடன் பேசுவது, சுவாரசியமான அனுபவம்.

**'நீங்கள் தண்ணீர் ஆராய்ச்சியில் ஈடுபட தூண்டுதலாக இருந்த விஷயம் எது?'**

"சொன்னால் நம்புவீர்களா? எனக்கு 36 வயது இருக்கும்போது, நான் ஒரு கிட்னி நோயாளி. அப்போது ஒரு இன்சூரன்சு நிறுவனத்தில் ஏஜெண்டாக இருந்தேன்.

'உங்களின் இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்துவிட்டன. டயாலிசிஸ் செய்தால்தான் உயிர்பிழைக்க முடியும். தயாராக இருங்கள்' என்று டாக்டர்கள் சொன்னபோது, எனக்கு கண்ணை கட்டி காட்டில் விட்டமாதிரி இருந்தது.

'திக்கற்றவர்களுக்கு தெய்வம்தானே துணை?' மலேசியாவில் உள்ள ஒரு தேவாலயத்துக்கு போய், பாதிரியாரிடம் நடந்ததைகூறி கண்ணீர் விட்டு அழுதேன்.



அத்தனை விஷயங்களையும் அமைதியாக செவிமடுத்தவர், 'உனக்கு ஒன்றும் ஆகாது' என்று சொன்னதுடன் நில்லாமல், எனக்கு ஒரு கேன் புனித தண்ணீர் அருந்த தந்தார். அது மிகவும் அருமையாக இருந்தது.

நான் 20 நாட்களுக்கு பிறகு, 'டயாலிசிஸ்' செய்வதற்காக, மறுபடியும் மருத்துவமனைக்கு போனேன். அங்கு என்னை பரிசோதித்த டாக்டர்களுக்கு கடும் அதிர்ச்சி.

'உங்கள் கிட்னியின் இயக்கம் முன்பைவிட அருமையாக உள்ளதே, எப்படி?' என்று என்னிடமே கேட்டார்கள். எனக்கு காரணம் தெரியவில்லை. ஆனால் யோசித்து பார்த்தபோது, தேவாலய தண்ணீரின் மகிமை ஞாபகத்துக்கு வந்தது. அங்கு உடனடியாக கிளம்பி போனேன்.

'உங்களுக்கு தந்தது, ஜெர்மனியில் இருந்து வந்திருந்த தண்ணீர்' என்றார், பாதிரியார். நான் அதில் ஒரு சொம்பு வாங்கி கொண்டுபோய், தண்ணீர் பரிசோதனைகூடத்தில் சோதித்து பார்த்தேன்.

இதில் 'அது அமிலதன்மை செறிந்த டிஸ்டில்டு தண்ணீர்' என்கிற விவரம் தெரியவந்தது. தண்ணீரின் உண்மையான அமில–கார சமநிலை அளவீடு, பி.எச்–7 ஆகும்.

தேவாலயத்தின் டிஸ்டில்டு தண்ணீரே கிட்னி நோயை குணப்படுத்தும்போது, உண்மை யான பி.எச்–7 தண்ணீரின் மகிமை எப்படிப்பட்ட அதிசயங்களை நிகழத்தும்? என்று எண்ணிய நான் அடுத்தகணமே,